பொதுமக்கள் வரவேற்பிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். அமைச்சர் அவர்களும் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே இடம் பெறச்செய்து நிறைவேற்ற அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் மிக முக்கியமான பாலம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இது அரசு மாவட்டப் பெருஞ்சாலையிலே அமைந்திருக்கக்கூடிய திட்டம். அதற்காக ஏறத்தாழ ரூ. 70 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது நிதிநிலை சரியில்லாத காரணத்தால்தான் இந்தத் திட்டம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனாலும், முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு உடனடியாக எடுக்க முடியுமா என்பது கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும்.

அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம்

***வினா எண் 271—திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகாசிக்கு அருகிலுள்ள அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) & (இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தில் இந்தப் பாலத்தில் ஒரு பஸ் அடித்துச் செல்லப்பட்டு 46 குழந்தைகள் மாண்டுவிட்டதும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அந்த இடத்தைப் பார்வையிட்டு நிவாரணத் தொகை வழங்க உத்தரவிட்டதும் தெரிந்ததே.

மீண்டும் இதுபோன்ற கோர சம்பவம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, அந்த இடத்தில் உயரமான பாலம் அமைத்திட இந்த நிதி ஆண்டிலாவது அரசு உத்தரவிடுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, எவ்வளவு வேகமாகக் கேள்வியைக் கேட்டார்களோ, அந்த வேகத்திலேயே, அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்கிறது. ஆனால், அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்றால், ஏறத்தாழ ரூ. 15 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த விபத்துக்கள் நடந்திருக்கிற காரணத்தினால் உடனடியாக பரிசீலனை செய்யப்படும்.

வளவன் ஆற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 272— திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முத்துப்பேட்டை ஒன்றியம் குன்னலூரிலிருந்து எக்கல் வழியாக மேலமருதூர் செல்லும் சாலையில் வளவன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் குறிப்பேதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளவனாற்றுப்பாலம் பற்றி, 1978 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்பொழுது கேள்வி கேட்டபோது, வளவனாற்றுத் திட்டத்திற்கு ஒன்றியத்திலிருந்து ரூ. 70,000 அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்டால் இல்லையென்று அறிவிக்கிறார்கள். நான் மீண்டும் சொல்வது, அங்கு இரண்டு பக்கமும் போகும்போது 15 மைல் சுற்றித்தான் பிரிந்து செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, மீண்டும் சம்பந்தப்பட்ட இலாகாவிற்குச் சொல்லி, அந்தப் பாலத்தைக் கட்ட பரிசீலனை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9.50.]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடிய சாலை முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினால் பராமரிக்கப்படுகின்ற சாலை